தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

4.04.2013 A.M

## "மா' சாகுபடியில் அறுவடைக்கு பிந்தைய தொழில் நுட்பம்



விவசாய விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்பது விவசாயிகளின் பரவலான குற்றச்சாட்டு. அறுவடைக்கு பிந்தைய சில தொழில்நுட்பங்களைக் கடைபிடிப்பதன் மூலம் விளைபொருள்களுக்கு கூடுதல் விலை கிடைக்கிறது என்பதே உண்மை.

தற்போது மாங்காய் அறுவடை நடைபெறும் பருவம் ஆகும். இதில், அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தைக் கடைபிடிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்கிறார் தருமபுரி மாவட்ட வேளாண் வணிகத் துறையின் துணை இயக்குநர் இ.செல்வம்.

உலகில் மாங்காய் உற்பத்தியில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில் 15,200 ஹெக்டேர் பரப்பளவில் மாங்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது செந்தூரா, அல்போன்சா போன்ற மாங்காய்கள் அறுவடை தொடங்கியுள்ளன.

மாங்காய் அறுவடையானது, மார்ச் இறுதியில் தொடங்கி ஜூன் மாதத்தில் நிறைவு பெறும். அறுவடையானது அதன் ரகங்களுக்கு ஏற்ப மாதங்கள் மாறுபடும்.

5 முதல் 15 ஆண்டுகள் வயதுடைய மாங்காய் மரங்களில் ஒரு ஹெக்டேருக்கு 7 முதல் 10 டன் மகசூலும், 16 முதல் 20 வயதுடைய மாங்காய் மரங்களில் ஒரு ஹெக்டேருக்கு 15 முதல் 20 டன் மகசூலும் கிடைக்கின்றன.

அறுவடைக்கான அறிகுறிகள்: பழுக்கும் தன்மை கொண்ட மாங்காயின் காம்புகள் தளர்ச்சி அடைந்து காணப்படும். அதன் தோலின் நிறம் கரும் பச்சை நிறத்திலிருந்து லேசான பச்சை நிறத்திற்கு மாறிக் காணப்படும். சதைப்பற்று வெண்மை கலந்த பச்சை நிறத்திலிருந்து லேசான மஞ்சள் நிறமாக மாறி இருக்கும்.

மாங்காய் அறுவடை செய்ய வேண்டிய முறைகள்: மாங்காயின் காம்பை 10 செ.மீ.-இல் இருந்து 20 செ.மீ. வரை விட்டு, அறுவடை செய்யும் கருவியான கத்திரிக்கோலால் கட் செய்ய வேண்டும். இதனால், மாங்காயின் பால், அதன் தோல் மீது விழாமல் பாதுகாக்கப்படும். பால், தோல் மீது படும் இடம் கரும் புள்ளியாக மாறி, பழம் கெட்டுவிடும்.

அறுவடை செய்யும் போது பழங்கள் கீழே விழுந்து காயம் அடையாமல் இருக்க வலையுடன் கூடிய அறுவடை செய்யும் கருவியைப் பயன்படுத்த வேண்டும். அறுவடை செய்யப்பட்ட காய்களை நேரடியாக சூரிய ஒளியில் படும்படி வைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நிழல் போன்ற குளிர்ச்சியான இடங்களில் வைக்க வேண்டும். (நேரடியாக சூரிய ஒளி, வெப்பம் இருக்குமானால் காய்கள் விரைவில் பழுக்க வாய்ப்பு ஏற்படுகிறது). சாக்குப் பை, கூடைகள் ஆகியவற்றில் மாம்பழங்களை வைக்கக் கூடாது. அவ்வாறு வைப்பதால் பழங்களில் காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

பிளாஸ்டிக் கிரேடில் பழங்களை வைப்பதன் மூலம், பழங்கள் மீது ஏற்படும் காயத்தைத் தடுக்கலாம்.

அறுவடைக்கு பின் மேற்கொள்ள வேண்டிய செய்நேர்த்தி முறைகள்: சரியான தருணத்தில் அறுவடை செய்யப்பட்ட காய்களை தரம் பிரித்து, விற்பனைக்கு கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு கொண்டு செல்லும் போது பிளாஸ்டிக் கிரேடுகளில் சரியான முறையில் பழங்களை அடுக்கி எடுத்துச் செல்ல வேண்டும். விற்பனைக்கு ஏற்ப பழம் பழுக்க வைக்கும் கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்துதல் வேண்டும்.

ஏற்படும் இழப்புகள்: மாம்பழத்தில் அழுகல் நோய் தாக்குதல் அதிகமாகிறது. முதிர்ச்சி அடையாத பழங்களை அறுவடை செய்வதால், மாங்காய் தண்டு அழுகல் மூலம் பழங்கள் சேதமடைகின்றன. பழங்களில் சுருக்கங்கள் ஏற்படுகின்றன. சரியான பேக்கிங்கில் பழங்களை அடுக்காமல் இருந்தால், காயங்கள் ஏற்பட்டு, அதிக சேதாரம் அடைகின்றன. மாம்பழங்களை சரியான தருணத்தில் அறுவடை மேற்கொள்ளாமல் இருந்தால், அவை பழுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

இதுபோன்ற காரணங்களால் 15 முதல் 20 சதவீதம் சேதம் அல்லது இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நிவர்த்தி செய்யும் முறைகள்: சரியான பருவத்தில் அறுவடை மேற்கொள்ள வேண்டும். காலை நேரங்களில் மாம்பழங்களை அறுவடை செய்து, நிழல் பகுதியில் சேகரித்து வைக்க வேண்டும். உரிய பேக்கிங் முறைகளைக் கையாண்டு, ஒரே வரிசையில் ஒரே தரத்தில் பழங்களை அட்டை பெட்டிகளில் அடைக்க வேண்டும்.

மாங்காய்களை காம்புடன் அறுவடை செய்தவுடன் அதில் வடியும் பாலானது அதன் தோல் மீது படாமல் இருக்க காம்புப் பகுதி கீழ் புறமாக இருக்கும்படி அதற்கான பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வலை பின்னப்பட்ட மூங்கில் தட்டில் 10 நிமிஷம் வைக்க வேண்டும். இதனால், மாங்காய் பால் பழங்களின் மீது படாமல் தவிர்ப்பதால் "சேப் பர்ன்' என்ற பழ அழுகளில் இருந்து பழத்தைப் பாதுகாக்க முடியும்.

மாம்பழங்களை பேக்கிங் செய்யும் முறைகள்: 40 ஷ் 30ஷ் 10 செ.மீ. அளவு கொண்ட அட்டைப் பெட்டிகளில் (காற்றோட்ட வசதி உள்ளவை) மாம்பழங்களை ஒரே வரிசையில் ஒரே அளவிலான ஒரே தரம் உள்ளவைகளை அடுக்க வேண்டும்.

இத்தகைய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் 40 சதவீத இழப்பைத் தவிர்ப்பது மட்டுமல்லாமல், 10 முதல் 20 சதவீதக் கூடுதல் வருவாயை ஈட்ட முடியும் என்கிறார் அவர்.

மேலும் விவரங்களுக்கு, வேளாண் வணிகத் துறையின் வேளாண்மை அலுவலர் தா.தாம்சனை நேரிலோ அல்லது 094435 63977 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

## விளை நிலங்களுக்கு பாதிப்பின்றி குழாய் எரிவாயுத் திட்டம்: தமிழக அரசின் முடிவை ஏற்று கெயில் வழக்கு முடித்துவைப்பு

விளை நிலங்களுக்குப் பாதிப்பு இல்லாமல் குழாய் வழியாக எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தை கெயில் நிறுவனம் செயல்படுத்த வேண்டும் என்ற தமிழக அரசின் முடிவை ஏற்று விவசாயிகள் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

கொச்சியிலிருந்து கூட்டநாடு, மங்களூர் வழியாக பெங்களூருக்கு குழாய் வழியாக எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தை கெயில் இந்தியா நிறுவனம் செயல்படுத்த உள்ளது. இதற்காக

கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் சேலம் ஆகிய 7 மாவட்டங்கள் வழியாக குழாய்கள் பதிக்கப்பட உள்ளன.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் தங்கள் விளை நிலங்கள் பாதிக்கப்படும் என்று கூறி விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இப்பிரச்னை தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் கெயில் நிறுவனம் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சம்பந்தப்பட்ட 7 மாவட்டங்களிலும் விவசாயிகள், கெயில் நிறுவனப் பிரதிநிதிகள் கொண்ட கூட்டத்தைக் கூட்டி ஒருமித்த முடிவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மாநிலத் தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டது.

எனினும், உயர் நீதிமன்ற உத்தரவுப்படி 7 மாவட்டங்களிலும் தனித்தனியாக விவசாயிகளின் கூட்டம் கூட்டப்படவில்லை என்றும், ஆகவே சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறி விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரான கந்தசாமி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி ஆர்.கே.அகர்வால், நீதிபதி என்.பால் வசந்தகுமார் ஆகியோரைக் கொண்ட முதன்மை அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்ற உத்தரவை ஏற்று கடந்த மார்ச் 6, 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் தலைமைச் செயலாளர் கூட்டம் நடத்தினார். அந்தக் கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த கருத்துகளை கேட்ட பிறகு, விவசாய விளை நிலங்கள் பாதிக்கப்படாதவாறு நெடுஞ்சாலைகளின் வழியே குழாய்களைப் பதிக்க கெயில் நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முடிவை தமிழக அரசு எடுத்துள்ளது. ஏற்கெனவே விவசாய விளை நிலங்களில் குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தால், அவற்றை அங்கிருந்து அகற்றுவதோடு, அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை கெயில் நிறுவனம் வழங்கிட வேண்டும் என்றும் அரசு தெரிவித்துள்ளது என பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது.

அரசின் இந்த பதிலை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், இந்த விவகாரத்தில் இதற்கு மேலும் விசாரணை தேவையில்லை என்று கூறி வழக்கை முடித்துவைத்து உத்தரவிட்டனர். மேலும், தமிழக அரசின் இந்த முடிவால் கெயில் நிறுவனம் பாதிக்கப்பட்டிருந்தால் அரசின் முடிவை எதிர்த்து அந்நிறுவனம் தனியாக வழக்குத் தொடரலாம் என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறியுள்ளனர்.

## பண்ருட்டியில் வெள்ளரி விளைச்சல் அமோகம்



பண்ருட்டி பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வெள்ளரி சாகுபடியில் காய்ப்பு அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

÷பண்ருட்டி வட்டத்தில் சிறுவத்தூர், வையாபுரிபட்டிணம், ஏரிப்பாளையம், அங்குசெட்டிப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் 50-க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் வெள்ளரி சாகுபடி செய்யப்படுகிறது.

÷கோடை காலத்துக்கு ஏற்ற மருத்துவ குணம் கொண்ட சிறந்த உணவு வெள்ளரி. வெள்ளரி பிஞ்சை பச்சையாகவும், சமைத்தும் சாப்பிடலாம். வெள்ளரி பழத்தை சர்க்கரை, வெல்லம் கலந்து சாப்பிட்டால் மிகச் சுவையாக இருக்கும்.

÷பண்ருட்டி பகுதி விவசாயிகள் விதை எடுப்பதற்காகவே வெள்ளரியை சாகுபடி செய்கின்றனர். இது குறித்து வெள்ளரி விவசாயிகள் கூறியது:

÷வெள்ளரி 3 மாத பயிர். வெள்ளரி பிஞ்சுகளை அறுவடை செய்வதில்லை. வெள்ளரி பழத்தில் உள்ள விதைதான் எங்கள் முக்கிய இலக்கு. ஒரு கிலோ விதை ரூ.150-க்கு விலை போகிறது. பழத்தில் இருந்து விதைகளை எடுத்து கழுவி காய வைத்து விற்பனை செய்து விடுவோம். வியாபாரிகள் வீடு தேடி வந்து விதைகளை வாங்கிச் செல்கின்றனர்.

÷தோல் நீக்கப்பட்ட வெள்ளரி விதையை பாக்கு மற்றும் இனிப்பு வகைகளில் சேர்க்கின்றனர். விதை நீக்கப்பட்ட வெள்ளரிப் பழத்தை கூடை ஒன்று ரூ.150 முதல் 200 வரை பழ வியாபாரிகளுக்கு விற்பனை செய்துவிடுவோம்.

÷வியாபாரிகள் யாரும் வாங்கவில்லை என்றால் நிலத்திலேயே போட்டுவிடுவோம். பழம் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் தோட்டப் பராமரிப்பு, மருந்து மற்றும் ஆள் கூலி உள்ளிட்ட செலவுகளை ஈடுகட்டும்.

÷ஒரு ஏக்கருக்கு 150 கிலோ விதை கிடைக்கும். விதை விற்பனை மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை நிகர லாபம் கிடைக்கும். கடந்த ஆண்டை விட இந்தாண்டு விளைச்சல் நன்றாக உள்ளது.

÷மின்சாரம் இல்லாததால் தண்ணீர் பாய்ச்ச முடியாத சூழல் காரணமாக குறைந்த பரப்பளவில்தான் பயிர் செய்துள்ளோம் எனத் தெரிவித்தனர்.

## "அரிசி விலை மேலும் உயர வாய்ப்பில்லை'

அரிசி விலை மேலும் உயர்வதற்கான வாய்ப்பில்லை என்று தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல், அரிசி வணிகர்கள் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் டி.துளசிங்கம் கூறினார்.

தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல், அரிசி வணிகர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் பொதுக்குழுக் கூட்டம் திருப்பூரில் புதன்கிழமை நடைபெற்றது. இதற்கு சம்மேளனத் தலைவர் டி.துளசிங்கம் தலைமை வகித்தார். மாநில செயலாளர் ஏ.சி.மோகன், பொருளாளர் சி.பி.சுப்பிரமணி, திருப்பூர் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ராமசாமி, செயலாளர் மனோகரன், பொருளாளர் செந்தில்நாதன், இணைச்செயலாளர் தேவராஜ் உள்பட பொதுக்குழு உறுப்பினர்கள் 250-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதில், அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல், அரிசி வணிகர்கள் தங்கள் பிரச்னை குறித்து கலந்தாய்வு செய்தனர். அரிசி ஆலைகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திடம் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு மட்டும் 1 சதவீத செஸ் வசூலிக்க வேண்டும். அரிசி ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யும் நெல்லுக்கு செஸ் வசூலிக்கக் கூடாது என்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பின்னர் சம்மேளனத் தலைவர் டி.துளசிங்கம் செய்தியாளர்களிடம் கூறியது:

அரிசி விலை இனி உயர்வதற்கான வாய்ப்பு இல்லை. வரும் 6 மாதங்களுக்குத் தேவையான அரிசி இருப்பு உள்ளது. மேலும், தமிழக அரசு வெளிமாநிலங்களில் இருந்து அரிசி கொள்முதல் செய்ய இருப்பதாகக் கூறியுள்ளது. எனவே, அரிசி விலை உயர்வதற்கான வாய்ப்பு இல்லை என்றார்.

## பருத்திக் கழகம் இருப்பு வைத்துள்ள பஞ்சை உள்நாட்டு தேவைக்கு விற்க வேண்டும்: சைமா வேண்டுகோள்

பருத்திக் கழகம் இருப்பு வைத்துள்ள பஞ்சை உள்நாட்டுத் தேவைக்காக விற்பனை செய்ய வேண்டும் என்று தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்க(சைமா) தலைவர் வைக்கிங் ஈஸ்வரன் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் சரத்பவாருக்கு செவ்வாய்க்கிழமை அவர் அனுப்பிய கடித விவரம்:

கடந்த 2 ஆண்டுகளாக பஞ்சு விலை ஏற்ற இறக்கம் காரணமாக நூல் விலையும் ஏற்ற இறக்கம் கண்டுள்ளது. இதனால் பனியன் தொழில், விசைத்தறி, கைத்தறி மற்றும் ஜவுளி சார்ந்த அனைத்து தொழில்களும் நலிவடைந்து வருகின்றன. ஒட்டுமொத்த ஜவுளித்துறையும் பாதிப்படைந்துள்ளது.

பருத்தி சீசன் முடிவடையும் தருவாயில் உள்ளது. பஞ்சு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே 80 லட்சம் பஞ்சு பேல்களுக்கு மேல் ஏற்றுமதி ஆகி உள்ளது. மத்திய அரசின் பருத்திக் கழகத்திடம் 25 லட்சம் பேல் இருப்பில் உள்ளது. பஞ்சு ஏற்றுமதியாளர்களும் சுமார் 25 லட்சம் பேல் கைவசம் வைத்துள்ளனர். இது தவிர இந்தியா முழுவதும் உள்ள பஞ்சு வியாபாரிகளிடமும் 40 லட்சம் பேல் பஞ்சு இருப்பில் உள்ளது.

ஒட்டு மொத்தமாக 90 லட்சம் பேல்கள் தான் கைவசம் உள்ளது. அடுத்த பருத்தி சீசன் வருவதற்கு மேலும் 6 மாத காலமாகும். அதுவரை இந்த 90 லட்சம் பேல்கள் பஞ்சை வைத்துத் தான் உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். எனவே, பருத்திக் கழகம் தன் கையிருப்பில் வைத்திருக்கும் பஞ்சை உள்நாட்டுத் தேவைகளுக்காக விற்பனை செய்ய வேண்டும்.

இதன் காரணமாக மற்றவர்களும் தங்களிடம் இருப்பு வைத்துள்ள பஞ்சு பேல்களை விற்பனை செய்ய முன் வருவார்கள். இதனால் ஓரளவுக்கு உள்நாட்டு பஞ்சு தேவை பூர்த்தியாவதுடன் நூல் விலையும் கட்டுக்குள் வரும். லட்சக்கணக்கான ஜவுளி உற்பத்தியாளர்களும், கோடிக்கணக்கான தொழிலாளர்களும் காப்பாற்றப்படுவது மத்திய அரசின் கையில் தான் உள்ளது. எனவே இந்த கோரிக்கையின் மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**4.04.2013 A.M**

## வெளிமாநில நெல்வரத்து அதிகம் : அரிசி விலை இனி குறையும்

திருப்பூர்: ""அரிசி விலை உயர்ந்திருப்பதாக சிலர் மாயை ஏற்படுத்துகின்றனர்; அப்படியில்லை. வெளிமாநிலங்களில் இருந்து அதிக அளவு நெல் கொள்முதல் செய்து, விலையை குறைக்க நாங்கள் முயற்சித்து வருகிறோம்," என, அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க மாநில செயலர் மோகன் பேசினார்.

தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர் சங்கம், நெல் அரிசி வணிகர் கூட்டமைப்பு சம்மேளனம் இணைந்த மாநில பொதுக்குழு கூட்டம், திருப்பூரில் நேற்று நடந்தது. இக் கூட்டத்தில், மாநில செயலர் மோகன் பேசியதாவது: தென்மேற்கு பருவமழை ஏமாற்றி விட்டது; காவிரி நதிநீர் வரவில்லை. அதனால், 12 லட்சமாக இருந்த சம்பா சாகுபடி பரப்பு, பாதியளவாக குறைந்துள்ளது. மின்வெட்டு பாதிப்பும் சேர்ந்ததால், நெல் விவசாயத்திற்கு அதிக செலவு செய்தாலும், விளைச்சல் முறையாக இல்லை. முன்பெல்லாம், நெல்லில் இருந்து மூன்று நாட்களில் உற்பத்தியான அரிசி, தற்போது ஐந்து நாட்கள் கழித்து உற்பத்தியாகிறது. இத்தகைய சூழலில் விலையை குறைத்து அரிசியை எப்படி விற்பனை செய்ய முடியும்? மக்களை வதைக்க கூடாது என்பதற்காக, ஆந்திரா, கர்நாடகாவில் மட்டும் நெல் கொள்முதல் செய்து வந்த நாங்கள், தற்போது, ம.பி., - உ.பி., மகாராஷ்டிரா, மேற்குவங்கம் வரை சென்று நெல்கொள்முதல் செய்கிறோம். அங்கு கோதுமை முக்கிய பயிராக இருப்பதால், நெல் குறைந்த விலைக்கு கிடைக்கிறது. அரிசி விலை உயர்ந்ததாக சிலர் மாயை ஏற்படுத்துகின்றனர்; அப்படியில்லை. வெளிமாநிலங்களில் அதிக அளவு கொள்முதல் செய்து விலையை குறைக்க, நாங்கள் முயற்சித்து வருகிறோம். இவ்வாறு அவர் பேசினார். இக்கூட்டத்திற்கு அரிசி ஆலை உரிமையாளர் சங்க மாநில தலைவர் துரைசிங்கம் தலைமை வகித்தார்.

## உற்பத்தி குறைந்ததால் வெல்லம் விலை உயர்ந்தது

சேலம்:தமிழகத்தில், வெல்லம் உற்பத்தியில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், சந்தையில் வெல்லத்தின் வரத்து குறைந்துள்ளது. இதனால் வெல்லம் விலை, ஒரே வாரத்தில் கிலோவுக்கு, 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால், கடும் வறட்சி நிலவுகிறது. நீர் நிலைகள் வறண்டு விட்ட நிலையில், குறைந்த அளவில் கிணற்று நீரை நம்பி பயிரிடப்பட்ட கரும்பும், தண்ணீரின்றி கருகி விட்டது. இதனால், வெல்லம் உற்பத்திக்கு தேவையான கரும்பு கிடைக்கவில்லை.

**ஈரோடு மாவட்டம்:**வெல்லம் உற்பத்தி அதிக அளவில் நடக்கும், ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி, சித்தோடு, நாமக்கல் மாவட்டம் பீலிக்கல்பாளையம், சேலம், தர்மபுரி, டெல்டா மாவட்டங்களிலும் கரும்பு கிடைக்காததால் ஆலை உரிமையாளர்கள் உற்பத்தியை நிறுத்தி உள்ளனர்.சேலம், செவ்வாய்ப்பேட்டையில் தினம் தோறும் நடக்கும் வெல்லச் சந்தையில், வெல்லம் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை, சேலம் தினசரி சந்தைக்கு, 1,200 சிப்பம் வரை, விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த வெல்லம், தற்போது, 500 சிப்பமாக குறைந்துள்ளது.நாமக்கல், ஈரோடு மாவட்ட வெல்லச் சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும் வெல்லத்தின் வரத்து, 70 சதவீதம் வரை, சரிவு ஏற்பட்டுள்ளது.

**உருண்டை வெல்லம்:**மார்ச், 25ம் தேதி ஒரு கிலோ உருண்டை வெல்லம், 42 ரூபாய்க்கு விற்பனையானது. இது, 10 ரூபாய் அதிகரித்து, 52 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அச்சுவெல்லம் கிலோ, 54 ரூபாயில் இருந்து, 64 ரூபாயாக அதிகரித்துள்ளது. சேலம் வெல்ல வியாபாரி சதிஸ்குமார் கூறியதாவது:தஞ்சாவூர், நாகப்பட்டினம், சேலம், தர்மபுரி, ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் இயங்கி வந்த, 1,500க்கும் மேற்பட்ட வெல்ல உற்பத்தி ஆலைகளுக்கு கரும்பு கிடைக்காததால், கடந்த வாரம், 800க்கும் மேற்பட்ட ஆலைகள் உற்பத்தியை நிறுத்திவிட்டன.

தற்போது, மேலும், 300 ஆலைகள் தங்களின் உற்பத்தியை நிறுத்தி உள்ளதால், சந்தையில், வெல்லம் வரத்து குறைந்து, விலை உயர்ந்துள்ளது. இது, மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## உழவர் மன்ற பயிற்சி

நாமக்கல்: நாமக்கல்லில், நபார்டு வங்கிய உதவியுடன் ரெட்ஸ் தொண்டு நிறுவனம் சார்பில், உழவர் மன்ற நிர்வாகிகளுக்கான பயிற்சிக் கூட்டம் நடந்தது.

ரெட்ஸ் தொண்டு நிறுவன செயலாளர் தங்கராஜ் தலைமை வகித்தார். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் பூவராகவன் பயிற்சியை துவக்கி வைத்து பேசினார். பயிற்சியில், விவசாயம் மூலம் அதிக லாபம் ஈட்டுதல், வங்கிகளுடன் விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துதல் போன்றவை குறித்து விளக்கி கூறப்பட்டது. நாமக்கல், எருமப்பட்டி,

பரமத்தி, எலச்சிபாளையம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம் ஆகிய பகுதியில் உள்ள, 51 உழவர் மன்ற நிர்வாகிகள், ஒருங்கிணைப்பாளர் துரைசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## "நியுட்ரி கிராஃப்ட்' தீவன குடோன் இன்று திறப்பு

சேந்தமங்கலம்: நாமக்கல்-சேலம் சாலையில், நியுட்ரி கிராஃப்ட் நிறுவனத்தின், மொத்த விற்பனையாளர் சாமி ஏஜன்சியின் தீவன குடோன் திறப்பு விழா இன்று (ஏப்., 4) நடக்கிறது. தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்கத் தலைவர் நல்லதம்பி, புதிய தீவன குடோனை திறந்து வைக்கிறார். நியுட்ரி கிராஃப்ட் நிறுவனத்தின் தமிழக மற்றும் கேரளா மாநில பொது மேலாளர் முருகன் குத்துவிளக்கேற்றுகிறார். ஏஜன்சி உரிமையாளர் சாமிதுரை வரவேற்கிறார்.
நிறுவன தமிழ்நாடு துணை மேலாளர் ஐயப்பன், விற்பனை அதிகாரி ஜமால், லக்கி ஏஜன்சீஸ் உரிமையாளர் கோபாலகிருஷ்ணன், கோழிப்பண்ணையாளர்கள், வாடிக்கையாளர்கள் உள்பட பலர் பங்கேற்கின்றனர்.

## பாசிப்பயறு சாகுபடி பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், கோடை பட்டத்தில் பாசிப்பயறு சாகுபடி குறித்து, ஒரு நாள் இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை:
பாசிப்பயறு சாகுபடி குறித்த பயிற்சியில் மண் பரிசோதனை செய்தல், நிலம் தயார் செய்தல், கோடை காலத்திற்கேற்ற விதை தேர்வு செய்தல் போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
பயிற்சியில் விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறக்குமதி பட்டுக்கு வரி ரத்து செய்ய கோரிக்கை

ராசிபுரம்: நகர காங்கிரஸ் சார்பில், செயல் வீரர்கள் கூட்டம், ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூரில் நடந்தது. நகரத் தலைவர் சிங்காரம் தலைமை வகித்தார். பொருளாளர் மோகன் வரவேற்றார். செயலாளர்கள் வெங்கடஜாலம், செங்கோடன், சுப்ரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், பட்டு நூல் கைத்தறி நெசவாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக மின்வெட்டு, பட்டு நூல் விலை உயர்வு போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், மத்திய அரசு

பட்ஜெட்டில், இறக்குமதி செய்யப்படும் பட்டு நூலுக்கு, பத்து சதவீதம் வரி விதித்துள்ளது. அதனால், பட்டு கைத்தறி நெசவாளர்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர். அதனால், இறக்குமதி செய்யப்படும் பட்டு நூலுக்கு விதிக்கப்பட்ட வரியை ரத்து செய்ய வேண்டும். ராசிபுரத்தில் இருந்து வெண்ணந்தூர், திருச்செங்கோடு வழித்தடத்தில், பவானிக்கு பஸ் இயக்க வேண்டும். சேலம் - நாமக்கல் தேசிய நெடுஞ்சாலை வெண்ணந்தூர் பிரிவு சாலையில், மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும், என்பது உள்பட பலர் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.
நிர்வாகிகள் தங்கவேல், கந்தசாமி, ராமலிங்கம், ராஜேந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## கடும் வெப்பம் காரணமாக காய்ந்து போன மக்கா சோளம்

அவலூர்பேட்டை;அவலூர்பேட்டை அருகே கடும் வெப்பத்தினால் மக்கா சோள தோட்டம் காய்ந்து போனது.
அவலூர்பேட்டை அடுத்த கோட்டப்பூண்டி ஊராட்சி ரோடுபாளையத்தை சேர்ந்த கோபால் மகன் பெரியண்ணன், 40. இவர் கடந்த டிசம்பரில் ஒரு ஏக்கர் நிலத்தில் 30 ஆயிரம் ரூபாய் செலவிட்டு மக்கா சோளம் பயிரிட்டார்.
மூன்று மாத பயிரான இந்த மக்கா சோளத்திற்கு வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். இப்பகுதியில் மழை பெய்யாததால் கிணற்றில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, வறண்ட நிலை உள்ளது. இதனால் கதிர்கள் நீண்டு வராமலும், நீர் சத்து இல்லாமல் முற்றிய நிலையில் அதன் நிறம் மாறி, மகசூல் அதிகரிக்காமல் போனது.
சாதாரணமாக அறுவடை நேரத்தில் தோட்டம் முழுவதும் பச்சை பசேல் என்று கம்பீரமான சோகைகளுடன், கதிர்கள் தலை கவிழ்ந்து காணப்படும். தற்போது அதிக வெப்பம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறையினால் சோகைகள் காய்ந்து, கதிர்கள் அதிக வளர்ச்சியில்லாமல் வறண்டு காணப்படுகிறது.
இப்பகுதியில் மக்கா சோளம் பயிரிட்ட பல விவசாயிகளும் நொந்து போய் உள்ளனர்.

## செழித்து வளர்ந்துள்ள எள் பயிர் தியாகதுருகம் விவசாயிகள் மகிழ்ச்சி

தியாகதுருகம்;தியாகதுருகம் பகுதியில் இறைவையில் சாகுபடி செய்துள்ள எள் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்
ளனர்.
தியாகதுருகம் பகுதியில் கோடைக்கால பயிராக இறைவையில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. கிணற்று பாசனத்தை நம்பி பயிரிடப்படும் குறுகிய கால பயிரான எள் விவசாயிகளுக்கு லாபம்

ஈட்டித்தருகிறது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்தால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து போதிய நீர் பாய்ச்சமுடியவில்லை. இதனால் குறுகிய பரப்பில் மட்டுமே எள் பயிரிடும் நிலை ஏற்பட்டது. தியாகதுருகம் பகுதியில் சில விவசாயிகள் எள்பயிரை நம்பிக்கையுடன் சாகுபடி செய்து கிடைக்கும் நீரை பாய்ச்சி பராமரித்து வருகின்றனர். தற்போது எள் செடிகள் நன்கு செழித்து வளர்ந்துள்ளது.

இதனால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் நேற்று எள் ஒரு மூட்டை 6,576 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது நல்ல விலை கிடைப்பதால் குறுகிய கால பயிராக கோடையில் எள் சாகுபடி செய்தவர்களுக்கு லாபம் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## சர்க்கரை ஆலையில் சிறப்பு அறவைப் பருவம் பயன்படுத்திக் கொள்ள ஆட்சியர் அறிவுரை

கள்ளக்குறிச்சி;கச்சிராயபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அறவைப் பருவம் முடிந்த நிலையில் சிறப்பு அறவைப்பருவத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது. இதன்மூலம் இவ்வாண்டே மேலும் 1.5 லட்சம் டன் கரும்பு அறவை செய்யப்பட உள்ளது.

ஆலை ஆட்சியர் சிவமலர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு :

கச்சிராயபாளையத்தில் உள்ள கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2012-13ம் ஆண்டிற்கான பிரதான அறவைப் பருவம் 18.10.2012ல் துவங்கி 26.3.2013ல் முடிந்தது.

இங்கு 3 லட்சத்து 82 ஆயிரத்து 162 டன் கரும்பு அறவை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலேயே சிறப்பு அறவைப் பருவம் துவங்கி, கரும்பு அறவை செய்ய அனுமதி கிடைத்துள்ளது.

நமது ஆலையின் சேவைக்குட்பட்ட பகுதியில் உள்ள கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் 2013 ஆக.16 முதல் 2013 அக்.15 வரை ஆலைப்பகுதியை சேர்ந்த கரும்பு உட்பட 1.50 லட்சம் டன் கரும்பை சிறப்பு அறவைப் பருவத்தில் அறவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பதியாத கரும்புகள் இடைத்தரகர்களால் குறைந்த விலைக்கு தனியார் ஆலைகளுக்கு எடுத்துச்செல்லப்படுகிறது.

இதுபோன்ற ஏமாற்றத்தை தவிர்க்க அரசு நிர்ணயிக்கும் விலைக்கே நமது ஆலைக்கு கரும்புகள் எடுத்துக் கொள்ளப்படும். நமது சிறப்பு அறவைத் திட்டத்திற்கான கரும்பு பதிவு ஆலையின் கரும்பு கோட்ட அலுவலகங்களில் பிரத்யேகமாக நடந்து வருகிறது. கரும்பு விவசாயிகள் உடனடியாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஆலைப்பகுதியில் உள்ள பதிவில்லா கரும்பு பரப்புகளை பதிய ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு மாதங்களுக்கு கிராமக் கூட்டங்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்த உள்ளனர். நமது ஆலையின் எல்லைக்குட்பட்ட அனைத்து கரும்பு விவசாயிகளும் தங்களது பதிவில்லா கரும்பை உடனடியாக பதிந்து ஆலைக்கு அனுப்ப வேண்டும்.

நமது ஆலைக்கு கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்கு கிரயப்பணம் உரிய நேரத்தில் வழங்கப்படுகிறது. இதில் 15.3.2013 வரையிலான கிரயப்பணம் வழங்கப்பட்டு
விட்டது.

இந்த அரிய வாய்ப்பை ஆலைப்பகுதி கரும்பு விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி ஆலையின் சிறப்பு அறவைப் பருவத்தை செம்மையாக்கிட வேண்டும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கோடையை குறிவைத்து கீரை விவசாயம் கோயம்பேடு செல்லும் பாலக்கீரை

பீமாரெட்டியூர்:கோடையில் உடலுக்கு குளிர்ச்சி தரும் கீரைக்கு மவுசு அதிகம் என்பதால், பீமாரெட்டியூர் விவசாயிகள் கீரை விவசாயத்தில் இறங்கி உள்ளனர்.

ஆர்.கே.பேட்டை ஒன்றியம், பீமாரெட்டியூரில் உள்ள விவசாயிகள், கீரை விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கோடைகாலத்தில் உடலுக்கு குளிர்ச்சி தரும் கீரையை அனைவரும் விரும்பி வாங்குகின்றனர்.

அதிக சுவை

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட பீமாரெட்டியூர்
விவசாயிகள் சிறுகீரை, முளைக்கீரை கோங்கோரா எனும் காசினி கீரை என்பன மிக முக்கியமான ரகங்களாகும். சுவை அதிகம் என்பதால், ஏராளமானோர் இதை விரும்பி வாங்குகின்றனர்.

பாலக்கீரை மிகப் பெரிய இலைகளுடன் பளபளப்பாக காணப்படும்; தரையில் இருந்து இலைகள் தோன்றும்; தண்டுகள் கிடையாது.

முள்ளங்கி செடி போன்று காணப்படும் தரைமட்டத்துடன் இந்த கீரை அறுவடை செய்யப்படும். அறுவடை செய்த அரை மணி நேரத்தில் வாடிவிடும்.

விற்பனைக்கு வரும்போது, வதங்கிய நிலையில் தான் காணப்படும். இதனால், பலரும் வாங்குவது இல்லை.

இதன் உண்மைத் தன்மையை உணர்ந்தவர்கள் தேடி வாங்கி பயன்படுத்துகின்றனர். ஒரு முறை விதைத்த செடியில் பலமுறை அறுவடை செய்யலாம். இதனால், விவசாயிகள் இந்த வகை கீரையை அதிகளவில் பயிர் செய்கின்றனர்.

அடிமாட்டு விலை...

இது குறித்து விவசாயி முனுசாமி கூறியதாவது:

இரண்டாவது முறையாக பாலக்கீரை பயிரிட்டு உள்ளேன். மொத்தமாக சென்னை கோயம்பேடு

சந்தைக்கு அனுப்பி வைக்கிறேன்.
கட்டு இரண்டு ரூபாய்க்கு எங்களிடம் வாங்கும் மொத்த வியாபாரிகள், கட்டு, 10 ரூபாய் முதல், 15 ரூபாய் வரை, விற்பனை செய்கின்றனர். பாடுபட்டு விளைவிக்கும் எங்களுக்கு அடிமாட்டு விலைதான் கிடைக்கிறது.
இவ்வாறு முனுசாமி கூறினார்.

## ஒரு மூட்டைக்கு ரூ.400 குறைவு நெல் விவசாயிகள் புலம்பல்

திருக்கழுக்குன்றம்: திருக்கழுக்குன்றத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படாததால், தனியாரிடம் நெல் விற்பனை செய்யும்போது, ஒரு மூட்டைக்கு, அரசு நிர்ணயித்த விலையை விட, 400 ரூபாய் குறைவாக கிடைக்கிறது என, விவசாயிகள் புலம்புகின்றனர்.
திருக்கழுக்குன்றத்தை சுற்றியுள்ள கிராமங்களில், மக்களின் முக்கியத் தொழிலாக விவசாயம் உள்ளது. தற்போது நவரை பருவத்தில் பயிரிடப்பட்ட நெல் அறுவடை நடந்து வருகிறது. இப்பகுதியில் மட்டும் ஆண்டுக்கு, 20 ஆயிரம் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.
விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை வாங்குவதற்காக, கடந்த ஆண்டு திருக்கழுக்குன்றம் ஆசிரியர் நகரில், தற்காலிக நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. இதன் மூலம், விவசாயிகளிடமிருந்து கடந்த ஆண்டு, 5,000 டன் நெல் கொள் முதல் செய்யப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் தனியார் நெல் வியாபாரிகளிடம், குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
இதுகுறித்து, பொன்விளைந்தகளத்தூர் விவசாயி செந்தில் கூறுகையில்,"" தனியாரிடம் நெல் விற்பனை செய்யும்போது, அரசு நிர்ணயித்த விலையை விட 400 ரூபாய், ஒரு மூட்டைக்கு குறைவாக கிடைக்கிறது. இதனால் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, உடனடியாக நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும்," என்றார்.

## கோடையை குறிவைத்து கீரை விவசாயம் கோயம்பேடு செல்லும் பாலக் கீரை

பீமாரெட்டியூர்:கோடையில் உடலுக்கு குளிர்ச்சி தரும் கீரைக்கு மவுசு அதிகம் என்பதால், பீமாரெட்டியூர் விவசாயிகள் கீரை விவசாயத்தில் இறங்கி உள்ளனர்.
ஆர்.கே.பேட்டை ஒன்றியம், பீமாரெட்டியூரில் உள்ள விவசாயிகள், கீரை விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கோடைகாலத்தில் உடலுக்கு குளிர்ச்சி தரும் கீரையை அனைவரும் விரும்பி வாங்குகின்றனர்.
இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட பீமாரெட்டியூர் விவசாயிகள் சிறுகீரை, முளைக்கீரை கோங்கோரா எனும் காசினி கீரை என்பன மிக முக்கியமான ரகங்களாகும். சுவை அதிகம் என்பதால், ஏராளமானோர் இதை விரும்பி வாங்குகின்றனர்.

பாலக்கீரை மிகப் பெரிய இலைகளுடன் பளபளப்பாக காணப்படும்; தரையில் இருந்து இலைகள் தோன்றும்; தண்டுகள் கிடையாது.

முள்ளங்கி செடி போன்று காணப்படும் தரை

மட்டத்துடன் இந்த கீரை அறுவடை செய்யப்படும்.

அறுவடை செய்த

அரை மணி நேரத்தில் வாடிவிடும். விற்பனைக்கு வரும்போது, வதங்கிய நிலையில் தான் காணப்படும். இதனால், பலரும் வாங்குவது இல்லை.

இதன் உண்மைத் தன்மையை உணர்ந்தவர்கள் தேடி வாங்கி பயன்படுத்து

கின்றனர். ஒரு முறை விதைத்த செடியில் பலமுறை அறுவடை செய்யலாம். இதனால், விவசாயிகள் இந்த வகை கீரையை அதிகளவில் பயிர் செய்கின்றனர்.

இது குறித்து விவசாயி முனுசாமி கூறியதாவது:

இரண்டாவது முறையாக பாலக்கீரை பயிரிட்டுள்ளேன். மொத்தமாக சென்னை கோயம்பேடு சந்தைக்கு அனுப்பி வைக்கிறேன்.

கட்டு இரண்டு ரூபாய்க்கு எங்களிடம் வாங்கும் மொத்த வியாபாரிகள், கட்டு, 10 ரூபாய் முதல், 15 ரூபாய் வரை, விற்பனை செய்கின்றனர். பாடுபட்டு விளைவிக்கும் எங்களுக்கு

அடிமாட்டு விலைதான் கிடைக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## "இட்லி குண்டு' ரக நெற்பயிர் நடவு: சத்தி விவசாயிகள் ஆர்வம்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் இட்லி குண்டு ரக நெற்பயிர் நடவு செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

சத்தியமங்கலம் பகுதி விவசாயத்தை அடிப்படையாக கொண்டதாகும். இங்குள்ள விவசாயிகள் நெற்பயிர், மஞ்சள், வாழை, கரும்பு, மல்லிகை பூ, சம்பங்கி உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்து வருகின்றனர். இதில் கட்டாயம் நெற்பயிருக்கு முக்கியதுவம் கொடுப்பார்கள். சாப்பாட்டுக்கு தேவை என்பதால், தங்கள் விவசாய நிலத்தில் ஒரு பகுதியில் நெற்பயிர் நடவு செய்து, அறுவடையின்போது தங்கள் வீட்டு சாப்பாட்டுக்கு வைத்துவிட்டு, மீதி நெல்லை விற்பனை செய்வர்.

தற்போது புதியதாக "இட்லி குண்டு' என்ற புதிய ரக நெற்பயிர் அறிமுகம் செய்துள்ளனர். இந்த நெற்பயிரின் மூலம் கிடைக்கும் அரிசி சிறியதாக, குண்டாக இருக்கிறது. இந்த அரிசியை இட்லிக்கு மட்டும் பயன்படுத்த முடியும். தற்போது இட்லி அரிசியின் விலை மாதத்துக்கு மாதம் அதிகரித்து வருவதால், இட்லி அரிசியை பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் சாதாரண சாப்பாட்டு அரிசி ரகத்துக்கு முக்கியதுவம் கொடுத்து வந்த விவசாயிகள், தற்போது இட்லி குண்டு ரக நெற்பயிர் நடவு செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த புது

ரகம் நெல் விதைத்து, 30 நாட்களில் வயலில் உள்ள நாற்றை பிடுங்கி, வயலில் நடவு செய்த பின், 80 நாட்களில் அறுவடை செய்யப்படுகிறது.

சாப்பாட்டு ரக நெற்பயிர் ஒரு ஏக்கருக்கு, 25 டன் மகசூல் கொடுத்தால், இட்லி குண்டு ரக நெல் ஒரு ஏக்கருக்கு, 30 டன் மகசூல் கொடுப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். மேலும் தற்போது சாப்பாட்டு அரிசியை காட்டிலும் இட்லி அரிசியின் தேவை அதிகமாக இருப்பதால், இட்லி குண்டு வருமானம் அதிகம் கொடுக்கும் என விவசாயிகள் கருதுகின்றனர்.

## கடும் வறட்சியில் கடம்பூர் பகுதி வயலோடு வறண்டது "குச்சிகிழங்கு'

சத்தியமங்கலம்: கடம்பூர் மலைப்பகுதியில் பருவமழை பொய்த்ததால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் நடவு செய்யப்பட்ட குச்சிகிழங்கு செடி, வயலிலேயே வறண்டது. சத்தியமங்கலம் அடுத்துள்ளது கடம்பூர் மலைப்பகுதி. இது கடல் மட்டத்தில் இருந்து, 750 மீட்டர் உயரம் கொண்ட பகுதியாகும். இங்குள்ள மக்கள் தங்களுடைய வயலில் மானாவாரி பயிர்கள் நடவு செய்து அதன்மூலம் வருமானம் பெற்று வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும், இங்கு பருவமழை சரியாக பெய்து வருவதால், கடம்பூர் மலைப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு சிரமம் இல்லாமல் செழிப்பாக இருந்து வந்தனர். கடந்த நான்கு ஆண்டுகளாக தங்கள் வயல்களில் குச்சிக்கிழங்கு நடப்பட்டு, சரியாக பெய்த மழையினால் அதிக மகசூல் கொடுத்து வந்தது. இதனால் பாதாளத்தில் இருந்த கடம்பூர் மலைப்பகுதி மக்களின் வாழ்க்கை, ஓரளவு மேம்பட்டது.

ஆனால் நடப்பு ஆண்டில் பருவமழை பொய்த்ததால், இங்குள்ள விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். குடி தண்ணீருக்கே பல இடங்கள் தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது. எப்படியும் மழை வரும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் குச்சிக்கிழங்கு பயிரிட்டனர். இந்த குச்சிக்கிழங்கு தற்போது வயலோடு வறண்டு காணப்படுகிறது. குச்சிக்கிழங்கு செடி காய்ந்து கொஞ்சம், கொஞ்சமாக அழிந்து வருகிறது. இதனால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். பவளக்குட்டை, கல்கடம்பூர், ஏலஞ்சி, பசுவனாபுரம், கரளியம், பெரியஉல்லேபாளையம், சின்ன உல்லேபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் குடி தண்ணீர் தேடி பல கி.மீ., தூரம் பெண்கள் செல்கின்றனர்.

விவசாயிகள் தாங்கள் வைத்திருந்த கால்நடைகளுக்கு தீவனம் மற்றும் தண்ணீர் கிடைக்காததால், கால்நடைகளை கிடைக்கும் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

கடம்பூர் பகுதியில், 26ம் ஆண்டுகளுக்கு முன் இதுபோன்று வறட்சி நிலவியதாகவும், தற்போது மிகவும் மோசமாக வறண்டுள்ளதாக வருந்துகின்றனர்.

## ஸ்ரீவைகுண்டம் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கநெல்லை பொதுப்பணித்துறை அலுவலகம் மீண்டும் முற்றுகை வடகாலில் அடைப்பு சரிசெய்து தண்ணீர் திறப்பு

திருநெல்வேலி:ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்காலில் தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தி 35 கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் நெல்லை பொதுப்பணித்துறை அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று வடகாலில் அடைப்பு சரிசெய்யப்பட்டு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்காலில் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த ஏப்.1ம் தேதி விவசாயிகள் பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டனர். விவசாயிகளின் கோரிக்கை பொதுப்பணித்துறை தலைமை பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன் கூறியிருந்தார். இந்நிலையில் ஸ்ரீவை வடகால், தென்கால் பகுதியை சேர்ந்த 35 கிராம விவசாயிகள் நேற்று பாளை., பொதுப்பணித்துறை அலுவலகத்திற்கு வந்தனர்.கடந்த ஆண்டு பாபநாசம் அணையில் 55 அடியும், மணிமுத்தாறில் 55 அடியும், சேர்வலாற்றில் 12 அடியும் தண்ணீர் இருந்த நிலையில் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டதாகவும், தற்போது பாபநாசம் அணையில் 78 அடியும், மணிமுத்தாறில் 90 அடியும், சேர்வலாற்றில் 80அடியும் இருப்பதால் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை தாமிரபரணி திட்டக்குழு சேர்மன் உதயசூரியன் வலியுறுத்தினார். மேலும் வடகாலில் அடைப்பு ஏற்பட்டுள்ளதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.இதற்கு பதலளித்த செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், "ஸ்ரீவைகுண்டம் வடகாலில் அடைப்பு சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் கூடுதலாக விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்கும் எனவும், மாற்று முறையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாகவும் கூறினார். மேலும் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது குறித்து பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இதையடுத்து வடகால், தென்கால் விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.முற்றுகை போராட்டத்தில் திட்டக்குழு தலைவர் உதயசூரியன் தலைமையில் பஞ்., தலைவர்கள் அருண்பிரின்ஸ், அப்பாத்துரை, பாசன சங்க தலைவர் மதிவாணன், ஒருங்கிணைப்பாளர் சம்பத், பஞ்., தலைவர் ராஜ், தென்கால் பகிர்மான குழு தலைவர் ராஜபாண்டியன், துரைப்பாண்டியன், ஆத்தூர் சங்க தலைவர் மதிவாயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.போலீஸ் உதவிக் கமிஷனர் ராஜமன்னார் தலைமையில் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ் மற்றும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## வேளாண்மை பயிற்சி

காரைக்குடி:சாக்கோட்டை அருகே உள்ள புதூர் கிராமத்தில், "அட்மா திட்டத்தின்' கீழ், பண்ணைப்பள்ளி குறித்த பயிற்சி, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் மணிவண்ணன் தலை மை வகித்தார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் கிருஷ்ணசாமி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில், அட்மா அலுவலர், ஆரோக்கிய டேவிட் சுரேஷ், குப்பமுத்து கடலை, உளுந்து, மக்காச்சோளம் பயிரிடுவதற்கு தேவையான, தொழில் நுட்பங்களை வழங்கினர்.

### மழையால் குளிர்ந்த மா மரங்கள் 15 நாட்களில் சீசன் தொடங்கும்

தேனி:தேனி மாவட்டத்தில் பெய்த கோடை மழையினால் மா மரங்கள் குளிர்ந்து விளைச்சல் திறன் அதிகரித்துள்ளது. இன்னும் 15 நாளில் சீசன் தொடங்கும்.தேனி மாவட்டத்தில், கடந்த வாரம் இரண்டு நாள் கோடை மழை பெய்தது. முதல் நாளில் சாரலோடு நின்ற மழை மறுநாள் நல்ல முறையில் பெய்தது. இதனால் மாவட்டத்தில் 9,298 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மா மரங்கள் குளிர்ச்சியடைந்துள்ளன. தற்போது இந்த மரங்களில் காய்கள் பிஞ்சாக உள்ளது.காய் வளரும் பருவத்தில் மழை பெய்ததால், காய்கள் திரட்சியாகும் வாய்ப்பு உள்ளது. இன்னும் இரண்டு முறை காற்று வீசாமல், கோடை மழை மட்டும் பெய்தால் மா, விவசாயிகளுக்கு கொண்டாட்டம்.தற்போது அல்போன்சா, செந்தூரம், பங்கனப்பள்ளி காய் முற்றும் பருவத்தில் உள்ளது. இன்னும் 15 நாளில் அறுவடை செய்து சீசனை தொடங்கும் வாய்ப்புகள் உள்ளன. இந்த நேரத்தில் மழை பெய்தால் காய்களில் திரட்சியும், சுவையும் கிடைக்கும். எனவே மா விவசாயிகள் மழையினை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

## 03.04.2013

### நெல் பயிருக்கு பயிர் பாதுகாப்பு

இலை சுருட்டுப்புழு, அந்துப்பூச்சிகளின் இறக்கைகள் பழுப்பு கலந்த மஞ்சள் நிறம் கொண்டது. இப்பூச்சி தாக்குதலால் பயிர்களின் வளர்ச்சி குன்றிவிடும். இதைக் கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் 36இசி 400மில்லி/ஏக்கர் அல்லது குளோரிபைரிபாஸ் 200 மில்லி/ஏக்கர் இசி, 500 மிலி/ஏக்கர் வீதம் தெளிக்கலாம். நெல் பயிரை குருத்துப் பூச்சி தாக்கினால் ஏக்கருக்கு மானோகுரோட்டோபாஸ் 36% இசி 400 மில்லி தெளித்து கட்டுப் படுத்தலாம். புகையான்பூச்சி பழுப்பு நிறமானது. பூச்சிகள் தூர்களின் அடிப்பகுதியில் நீர் பரப்பிற்கு சற்று மேலாக அமர்ந்து சாற்றை உறிஞ்சும். பால் பிடிக்கும் முன்பே பயிர் கீழே சாய்ந்து கதிர்களை பதராக்கிவிடும். வயலில் தண்ணீரை வடித்துவிட்டு தூர்களின் அடிப்பாகங்களில் நன்கு படும்படி பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க வேண்டும். தாக்கப்பட்ட பயிருக்கு யூரியாவை அதிக அளவு இடக்கூடாது.

இமிடா குளோபிரிட் 17.8% லிட்டருக்கு 0.5 மில்லி அல்லது குளோரிபைரிபாஸ் 20% இசி லிட்டருக்கு 2.5 மில்லி வீதம் தெளிக்க வேண்டும். பயிர் பூக்கும் தருணத்தில் நாவாய்ப் பூச்சி தாக்கும். இதைக் கட்டுப் படுத்த மாலத்தியான் 5 சதத்தூள் ஏக்கருக்கு 10 கிலோ தூவ வேண்டும். நெற்பயிரில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவது குலைநோயாகும். இதைத்தடுக்க கார்பென்டாசிம் 50 டபிள்யூ (500 கிராம்/எக்டர்) இந்த மருந்தை கதிர்விடும் பருவத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் இடைவெளி விட்டு மீண்டும் தெளிக்க வேண்டும். பாக்டீரியா இலை கருகல் நோயினைக் கட்டுப்படுத்த வேண்டும். தாக்கப்பட்ட பயிருக்கு யூரியாவை அப்படியே கொட்டாமல் இரண்டு அல்லது மூன்று முறைகளாக இடவேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கீழ்க்கண்ட சிபாரிசினை தெரிவிக்கின்றனர். ஐந்துசத வேப்பங்கொட்டை சாறு அல்லது மூன்று சத வேப்ப எண்ணெய் கரைசல் அல்லது 10 சத வேலிக்கருவேல் இலைப்பொடி சாறு அல்லது 20 சத சாணக்கரைசலை நோய் தோன்றும் தருணத்திலும் மீண்டும் 10 நாட்கள் இடைவெளியில் மறுமுறையும் தெளிக்கலாம். இதனால் இலைக்கருகல் நோயினைக் கட்டுப்படுத்த இயலும். நாற்றுக் களுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டும். நாற்றுக்களை சூடோமோனாஸ் ஒரு கிலோ கலவையில் வேரை நனைத்து நடவுசெய்ய வேண்டும். நடவு வயலில் ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் போதிய தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். சூடோமோனாஸ் 200 கிராம் அளவினை 200 லிட்டர் நீரிலும் கலந்து தெளிக்க வேண்டும். பிரச்னை தொடர்ந்தால் ஏக்கருக்கு கார்பன்டாசிம் 200 கிராம் அளவினை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். குலைநோய் பிரச்னை தொடராது. நடவு வயலிலும், வரப்பிலும் பாசன வாய்க்காலிலும் களைச் செடிகளை அகற்றி வரப்பினை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வயலில் அறுவடைக்குப் பின் அடிக் கட்டைகளை வயலில் உழுது அழித்துவிட வேண்டும். நெற்பயிரில் கடைசி உழவுக்குப்பின் வேப்பம் புண்ணாக்கை இடும்போது பயிரைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். அளவிற்கு அதிகமாக தழைச்சத்து உரத்தை போடக்கூடாது. தானிய நிறமாறல் நோய் வராமல் தடுக்க திரம் 200 கிராமுடன் கார்பென்டாசிம் 200 கிராம் (எக்டருக்கு) இரண்டு முறை அதாவது 50 சதம் பூத்த பிறகு ஒரு முறையும், பின் 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் கலந்து தெளிக்க வேண்டும். நெற்பழ நோய் தோன்றினால் கோசைட் 2.5 கிராம் (லிட்டர் தண்ணீரில்) 50 சதம் பூத்த பிறகு ஒரு முறையும் பின் 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்க வேண்டும். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளும் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பில் உதவ தயாராக இருக்கின்றனர். விவசாயிகள் இந்த

உதவிகளைப் பெற்று பயன்அடையலாம்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

## சின்னச்சின்ன செய்திகள்

**வேளாண் சார் ஆடை வடிவமைப்பு அலங்கார நுட்பம்:** துணி உற்பத்தி, ஆடை வடிவமைப்பு துணிகளின் அலங்காரம் ஆகியவற்றில் திறனும், வேளாண் வீண் பொருட்கள் பற்றிய அறிவும் இருப்பின் உழவர்களின் வாழ்வாதாரம் முன்னேறும். உலக அளவில் இயற்கை விவசாயம் மூலம் கிடைக்கும் பொருட்களின் தேவை அதிகமாக உள்ளது. எனவே இயற்கை சாயம், வேளாண் கழிவுகளிலிருந்து கிடைக்கும் நூலிழைகளுக்கு தற்போது மக்களிடையே அதிக வரவேற்பு உள்ளது. உழவர்கள் வேளாண் கழிவுகளை(எரு) சோளத்தட்டை, வாழைத் தண்டு போன்றவற்றை வீணாக்காமல் அவற்றை நூலிழைகள் தயாரிப்பதற்கு பயன்படுத்த லாம். பல்வேறு இலைகள், பூக்கள், மரப்பட்டைகளில் இருந்து இயற்கை சாயம் தயாரிக்க முடியும். "கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்; கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ற சொல்லுக்கேற்ப தையல் கற்றுக்கொண்டால் வேளாண்மை இல்லாத காலங்களில் வருமானம் பெற உதவியாக இருக்கும். இவற்றை மனதில் கொண்டு மனிதவள மேம்பாட்டுத்துறை இயற்கை சாயங்கள், நூல் தயாரிக்கும் இழைகள், அவற்றின் மூலப்பொருட்கள் பற்றிய ஆராய்ச்சிகள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

**நெல் தரிசில் பயறுவகைப் பயிர்கள்:** காவிரி பாசனப்பகுதியில் நெல் அறுவடைக்கு முன்பாக அல்லது நெல் அறுவடைக்கு பின்னர் நிலத்தில் அதிகம் ஈரப்பதத்தைக் கொண்டு சாகுபடி செய்யப்படும் பயிர்கள் நெல் தரிசுப் பயிர்கள் என்றும் நெல் சார்ந்த பயிர்கள் எனவும் அழைக்கப்படுகின்றது. உளுந்து, பச்சைப்பயறு போன்றவைகள் நெல் அறுவடைக்கு முன்பாக மெழுகுபதத்தில் விதைப்பு செய்யப்படுகிறது. பருத்தி பயிர் நெல் அறுவடைக்குப் பின் வயலில் உள்ள ஈரப்பதத்தைக் கொண்டுநெல் தாள்களுக்கு இடையில் எந்தவித நிலத்தயாரிப்பும் இல்லாமல் வரிசையாக விதைக்கப்படுகிறது. நிலக்கடலைப்பயிர் ஆற்றுப் பாசனப் பகுதியில் மணற்பாங்கான நிலங்களில் நெல் அறுவடை செய்தபிறகு நிலத்தை நன்கு உழுது சமன் செய்து இயந்திரம் மூலமாகவோ ஆட்கள் கொண்டோ விதைக்கப்பட்ட பிறகு பாத்திகள் அமைக்கப்பட்டு சாகுபடி செய்யப்படுகிறது.
தைப்பட்டத்தில் நெல் தரிசில் உளுந்து பயறு விதைப்பு செய்ய முடியாத சூழ்நிலை, பாசன வசதி இல்லாமை போன்ற காரணங்களைப் பழைய ஆற்றுப் பாசன பகுதிகளின் களிமண் பூமியில் குறைவான நிலத் தயாரிப்புடன் மாசிப்பட்டத்தில் எள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.
நெல் தரிசில் உயர்விளைச்சல் உளுந்து ரகங்களான ஏ.டி.டீ.3, ஏ.டி.டீ.4, பச்சைப்பயறு ரகங்களான ஏ.டி.டீ.3, கே.எம்.2 ஆகியவற்றை சாகுபடி செய்யலாம். விதைப்பு செய்ய தைப்பட்டம் (ஜனவரி 15

முதல் பிப்ரவரி 15 வரை) ஏற்ற பருவம். நல்ல முளைப்புத்திறன் உள்ள பூச்சி நோய்கள் தாக்காத, சான்றிதழ் பெற்ற விதைகள் இருந்தால் எக்டருக்கு 30 கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் விதைநேர்த்தி செய்ய வேண்டும். 24 மணி நேரம் கழித்து 30 கிலோ விதையினை நுண்ணுயிர்களான ரைசோபியம் 600 கிராம், பாஸ்போ பாக்டீரியா 600 கிராம், குளிர்ந்த அரிசிக் கஞ்சியில் நாற்று விதைநேர்த்தி செய்து நிழலில் உலர்த்தியபின் விதைக்க வேண்டும்.

ஆட்கள் மூலம் நெல் அறுவடை செய்யும்போது நெல் அறுவடைக்கு சுமார் 7-10 நாட்களுக்கு முன் சரியான ஈரப்பதத்தில் அதாவது மெழுகு பதத்தில் விதைக்க வேண்டும். இயந்திரம் மூலம் அறுவடை செய்வதாக இருந்தால் நெல் அறுவடைக்கு 4-6 நாட்களுக்கு முன்பு விதைக்க வேண்டும். ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் என்ற அளவில் பயிர் எண்ணிக்கையை பராமரிப்பது அவசியம்.

விளைச்சலை அதிகரிக்க நன்கு பூத்திருக்கும் தருணத்தில் ஒரு எக்டருக்கு 5 கிலோ "பயறு ஒண்டர்' என்ற பயிர் வளர்ச்சி ஊக்கியை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். பயறு ஒண்டர் கிடைக்காத நிலையில் விதைத்த 25 மற்றும் 40ம் நாள் 2 சதம் டி.ஏ.பி., 1 சதம் பொட்டாசியம் குளோரைடு, 40 பி.பி.எம். பிளானோபிக்ஸ் பயிர் வளர்ச்சி ஊக்கி அடங்கிய கரைசலை காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும்.

நெல் தரிசு பயிரில் அதிகமாக தாக்குதலை ஏற்படுத்தும் புரோடீனியா என்ற புகையிலைப் புழுவை கட்டுப்படுத்த அதன் முட்டைக்குவியல்களையும் கூட்டமாக ஒரே இலையில் பச்சையத்தை சுரண்டி உண்ணும் இளம் புழுக்களையும் பொறுக்கி அழித்துவிட்டு எக்டருக்கு அரிசித்தவிடு 12 கிலோ, நாட்டுச்சர்க்கரை 1.25 கிலோ, கார்பரில் 1.25 கிலோ, போதுமான தண்ணீர் (7 லிட்டர்) கலந்து விஷ உண்ணி உருண்டைகளாக உருட்டி, வயலில் மாலை வேளையில் வைக்க வேண்டும்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## வறண்ட நிலத்தில் பட்டர் பீன்ஸ் சாகுபடி

**தேனி அம்பாசமுத்திரம் விவசாயி சாதனை**

தேனி மாவட்டம், தேனி ஊராட்சி ஒன்றிய பகுதிகள் முழுமையாக நிலத்தடி நீர் மட்டம் குறைந்த கருமைப் பகுதியாக, மாவட்ட நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.வைகையில் நீரோடும் மூன்று முதல் ஐந்து மாதங்கள் மட்டுமே, இப்பகுதியில் உள்ள போர்வெல்களிலும், கிணற்றிலும் நீர் ஊற்று கிடைக்கும். மற்ற நாட்களில் இப்பகுதி போர்களும், கிணறுகளும் வறண்டு விடும். இப்பகுதி முழுவதும் ஒருபோக சாகுபடி மட்டுமே நடக்கிறது.

இங்குள்ள செம்மண் பூமியான, அம்பாசமுத்திரத்தை சேர்ந்தவர் விவசாயி எ.ஜெயசீலன்,42. பிளஸ் 2 வரை மட்டுமே படித்துள்ள இவர், தனக்கு சொந்தமான 4 ஏக்கர் நிலத்தில், வழக்கமான

மக்காச்சோளம், வெங்காயம் போன்ற தரைப்பகுதியில் நன்கு விளையக்கூடிய பயிர்களை சாகுபடி செய்தார். இதனால் கிடைத்த குறைவான வருமானம் குடும்பம் நடத்தக்கூட போதுமானதாக இல்லை.

இதனால் வழக்கமான விவசாயிகளை போல் ஜெயசீலனும், கடன் மற்றும் வறுமையில் வாடினார். விவசாயத்துறை நிபுணர்களை தொடர்பு கொண்டு, இவர் ஆலோசனைகளை கேட்ட போது கூட அதிகாரிகள், நிபுணர்கள் பலரும், தரைப்பகுதியில் விளையக்கூடிய பயிர்களை மட்டும் சாகுபடி செய்யுங்கள். மலைப்பகுதியில் விளையும் பயிர்களை சாகுபடி செய்தால், முடியாது எனக்கூறி இவரது நம்பிக்கையை தகர்த்தனர்.

இதேபோன்ற சாகுபடி முறைகளை கையாள தொடங்கினால், வெற்றி பெற முடியாது எனக் கருதிய ஜெயசீலன், மனம் தளராமல் தொடர்ந்து மாற்றுவழிகளை தேடினார். தினமலர் நாளிதழில் வரும் விவசாய மலர் பகுதியை தொடர்ந்து படித்தார். அதில் எழுதியவர்களை தொடர்பு கொண்டு ஆலோசித்தார்.

அதன் பிறகு, கொடைக்கானல் மலைப்பகுதியில் மட்டுமே விளையும் பட்டர்பீன்ஸ் ரகத்தை சாகுபடி செய்ய முயற்சி செய்தார். தனது நான்கு ஏக்கர் நிலத்தில் 10 சென்ட் நிலத்தை ஒதுக்கி, பல முறை சோதனை சாகுபடி செய்தார். இதில் குளிர்காலத்தில், காற்றில் ஈரப்பதம் அதிகம் உள்ள சீசன் நேரத்தில் பட்டர்பீன்ஸ் விளையும், என்ற முடிவுக்கு வந்தார்.

கொடைக்கானலில் பட்டர்பீன்ஸ் விதைகளை வாங்கி சாகுபடி செய்தார். முதல் சாகுபடியில், 60 சென்ட் கொண்ட ஒரு குழி நிலத்தில் 500 கிலோ மட்டுமே பீன்ஸ் விளைந்தது. ஒரு ஏக்கருக்கு அதிகபட்சம், 850 முதல் 900ம் கிலோ மட்டுமே பீன்ஸ் கிடைத்தது. இருந்தாலும் மனம் தளராமல், தானே சொந்தமாக விதைகளை உருவாக்கி சாகுபடி செய்தார்.

இம்முறை ஒரு ஏக்கருக்கு சராசரியாக 6300 கிலோ வரை (ஒரு குழிக்கு சராசரியாக 3500 முதல் 3800 கிலோ வரை) விளைச்சல் கிடைத்தது. பட்டர்பீன்ஸ்க்கு நல்ல விலையும் கிடைத்ததால், சாதனை விவசாயி, ஜெயசீலனுக்கு ஜாக்பாட் அடித்தது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக வறண்ட பகுதியிலும் பட்டர்பீன்ஸ் விளைவித்து, சாதனை படைத்து வருகிறார். இவரது நிலத்தில் பட்டர்பீன்ஸ் விளைந்ததை பார்த்த மற்ற விவசாயிகள், பட்டர் பீன்ஸ் சாகுபடி செய்தனர். ஆனாலும் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. ஜெயசீலனால் மட்டுமே சாதிக்க முடிந்தது எப்படி, என அவர் கூறியதாவது:

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் பட்டர் பீன்ஸ் சாகுபடி செய்து முடித்து விட வேண்டும். 80 நாட்கள் பயிரான பட்டர்பீன்ஸ் செடிகளில், நடவு செய்த 65வது நாளில் இருந்து காய்பறிக்க

முடியும். தொடர்ந்து 80 நாள் வரை பறிக்கலாம். சில நேரங்களில் விளைச்சல் திறன் அதிகம் இருந்தால், கூடுதலாக ஐந்து நாட்கள் விளையும்.

நல்ல குளிர், ஈரப்பதம் நிறைந்த காற்று, தண்ணீர் வசதி, முறையான பராமரிப்பு தேவைப்படும். பீன்ஸ் செடி, பூ, தண்டு என அனைத்தும் இனிப்புச்சுவை கொண்டவை. இதனால் புழுக்கள் அதிகம் காணப்படும். இதற்கு பயந்து பூச்சி கொல்லி மருந்துகளை அடித்து விடக் கூடாது. மூலிகை, இயற்கை மருந்துகள் மார்க்கெட்டில் கிடைக்கின்றன. இந்த மருந்துகளை தெளிக்க வேண்டும். இதன் மூலம் பூச்சி, புழுக்கள் கட்டுப்படுத்தப்படும். ரசாயன மருந்துகளை தெளித்தால் செடிகள் வாடி விடும். ரசாயன உரங்கள் தேவைக்கு ஏற்ப கொடுக்க வேண்டும். இதுவரை நான் சொட்டுநீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யவில்லை. இப்போது நிலத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து வருகிறேன்.

**சோதனை**: இனிவரும் காலங்களில் இன்னும் அதிக விளைச்சல் எடுப்பேன். இன்னமும் பலவித மலைப்பயிர்களை விளைவிக்க சோதனை நடந்து வருகிறது. கொடைக்கானலில் விளையும் "அவகோடா' செடிகளை சோதனை முறையில் நட்டுள்ளேன். இது காய்க்குமா என்ற முடிவுக்கு வரவே, ஆறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். அதற்கு இயற்கையும் ஒத்துழைக்க வேண்டும், என்றார். இவரிடம் பேசி ஆலோசனை பெற 99441 33016.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**4.04.2013 A.M**

---

### பழநி மார்க்கெட்டில் வெங்காயம் விலை உயர்வு

பழநி, : பழநி மார்க்கெட்டில் வெங்காயம் கிலோ ரூ.42 ஆக விலை உயர்ந்துள்ளது. மற்ற காய்கறிகளின் விலையும் ஏற்றம். இறக்கமாக உள்ளன.

சுட்டெரிக்கும் கோடை வெயிலாலும், கடும் வறட்சி நிலவுவதாலும் விவசாயம் கடுமையாக பாதித்துள்ளது. கோடையில் சில காய்கறி களின் விளைச்சல் குறைந் தும், சிலவற்றின் விளைச்சல் அதிகரித்தும் வருவதால் விலையில் ஏற்றம், இறக்க மாக காணப்படுகிறது. பழநி காய்கறி மார்க்கெட் டில் கடந்த சில நாட்களுக்கு முன் கிலோ ரூ.20க்கு விற்ற தக்காளி தற்போது ரூ.6க்கு விற்கப்படுகிறது. கிலோ ரூ.24க்கு விற்ற உருளைக் கிழங்கு ரூ.18க்கு விற்கப்படு கிறது. ரூ.24க்கு விற்ற சின்னவெங்காயம் ரூ.42க்கு விற்கப்படுகிறது.

கொடைக்கானல், ஊட்டி உள்ளிட்ட பகுதி களில் மழை இல்லாததால் கிலோ ரூ.40க்கு விற்ற பீன்ஸ் தற்போது கிலோ ரூ.70க்கு விற்கப்படுகிறது. கிலோ ரூ.28க்கு விற்ற கேரட் தற்போது ரூ.48க்கு விற்கப்படுகிறது. கிலோ ரூ.80க்கு விற்ற பட்டர் பீன்ஸ் தற்போது ரூ.120க்கு விற்கப்படுகிறது. கிலோ ரூ.18க்கு விற்ற பச்சை மிளகாய் ரூ.36க்கு விற்கப் படுகிறது. கிலோ ரூ.40க்கு விற்ற பச்சை பட்டாணி தற்போது ரூ.60க்கு விற்கப் படுகிறது.

### நகைக் கடன்களை தவிர்த்து விவசாயிகளுக்கு அதிகளவில் பயிர்க்கடன் வங்கியாளர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்

நாகை, : வங்கிகள் விவசாயிகளுக்க நகைக்கடன்கள் கொடுப்பதை தவிர்த்து அதிகளவில் பயிர்க்கடன்கள் வழங்க வேண்டும் என்று நாகையில் நடந்த வங்கியாளர்கள் கூட்டத்தில் கலெக்டர் கேட்டுக்கொண்டார்.

நாகை கலெக்டர் அலுவலகத்தில் வங்கியாளர் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு தலைமை வகித்து மாவட்ட கலெக்டர் முனுசாமி பேசியதாவது:

விவசாயிகளுக்கு நகையின் பேரில் விவசாய கடன் கொடுப்பதை தவிர்த்து நேரடி பயிர்க்கடனை அதிகளவில் வழங்க வேண்டும். நடப்பாண்டின் இலக்கு கடந்த ஆண்டு நபார்டு வங்கியின் திட்ட இலக்கை கருத்தில் எடுத்து கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை போலவே நடப்பாண்டும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பயிர்க்கடன் ரூ.1876.97

கோடியாகவும், விவசாய தொழில் சாதனங்களுக்கு ரூ.84.10 கோடியாகவும், பால் உற்பத்திக்கு ரூ.118.95 கோடியாகவும், மீன் உற்பத்திக்கு ரூ.26.82 கோடியாகவும், குடோன் வசதிக்காக ரூ.20.98 கோடியாகவும், விவசாய மதிப்பு கூட்டு பொருட்களுக்கு ரூ.10 கோடியாகவும் உயர்த்தப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் நீட்ஸ் திட்டமான புதிய தொழில் முனைப்பு புத்தாக்கத்திற்கு முன்னோடி வங்கி அனைத்து வங்கிகளுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுத்து, குறைந்த பட்சம் ஒரு பயனாளிக்காவது இத்திட்டத்தின் மூலம் கடன் வழங்க பரிந்துரை செய்துள்ளது.

நடப்பு நிதியாண்டிற்கான இலக்கு ரூ.1,608.49 கோடியில் 31.12.2012 முடிய உள்ள 9 மாத காலத்தில் மாவட்டத்தில் உள்ள வங்கிகள் ரூ.1,520.02 கோடி வழங்கி உள்ளது. இது இலக்கை காட்டிலும் 121 சதவீதம் கூடுதலாகும். குறு மற்றும் சிறு தொழில்கள், கல்வி ஆகிய கடன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் பேசினார்.

கூட்டத்தில், மைய வங்கியின் துணை பொது மேலாளர் வெங்கடேஷ், நபார்டு வங்கியின் துணை பொது மேலாளர் கணேஷ், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மண்டல மேலாளரும், மாவட்ட வங்கியாளர்களின் ஒருங்கிணைப்பாளருமான சிவசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர். முன்னோடி வங்கி மேலாளர் கதிர்வேல் நன்றி கூறினார்.

**சுட்டெரிக்கும் வெயிலால் பழநி பகுதியில் விவசாயம் பாதிப்பு**

பழநி, : சுட்டெரிக்கும் கோடை வெயிலால் பழநி பகுதியில் விவசாயம் கடுமையாக பாதித்துள்ளது. பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் விவசாயம் முதன்மையான தொழிலாக உள்ளது. அணை மற்றும் கண்மாய் பாசனத்தை பயன்படுத்தி விவசாயம் செய்யப்படு கிறது. இந்த வருடம் போதிய மழை இல்லாததால் அணைகளில் நீர்வரத்து இல்லை. இதனால் விவசாயம் செய்வதற்கு போதிய நீரின்றி போனது. இப்பகுதிகளில் நெல் மற்றும் கரும்பு பயிர்களின் விவ சாயம் குறைந்து விட்டது. நெல் மற்றும் கரும்பு விவசாயிகள் கடும் பாதிப்படைந்துள் ளனர்.

ஆனால், சில விவசாயி கள் காய்கறி விவசாயத்தை மேற்கொண்டு வருகின்ற னர்.

இதன்காரணமாக சந்தைக்கு தேவைக்கும் அதிகமான காய்கறிகளின் வரத்து காரணமாக தக்காளி, கத்திரி உள்ளிட்ட காய்களின் விலையில் கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதுகுறித்து பழநி காந்தி மார்க்கெட்டை சேர்ந்த வியாபாரி ரகுமான் கூறுகையில், “போதிய மழை இல்லாததால் விவசாயிகள் குறைந்த நீர்த் தேவை கொண்ட தக்காளி யை அதிகளவு பயிரிட்டுள் ளனர். ஒட்டுரக தக்காளியை அதிகளவு பயிர் செய்தி ருப்பதால் விளைச்சல் அதிகமாகிவிட்டது. அனைத்து பகுதி களிலும் இதே நிலை மை நீடிப்பதால் சந்தை யில் தக்காளி உள்ளிட்ட சில காய்கறிகள் தேக்கமாகி அதன் விலையும் வீழ்ச்சி யடைந்துள்ளது.

**மேட்டூர் அணை நீர்வரத்து சரிவு**

மேட்டூர், : மேட்டூர் அணைக்கு கடந்த ஒரு வாரமாக விநாடிக்கு 64 முதல் 85 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் திடீரென நீர் வரத்து விநாடிக்கு 107 கன அடியாக அதிகரித்தது. ஆனால் நேற்று அணைக்கு வரும் தண்ணீரின் அளவு விநாடிக்கு 107 கனஅடியில் இருந்து மீண்டும் விநாடிக்கு 60 கன அடியாக குறைந்தது. அணையில் இருந்து நாமக்கல், கரூர், திருச்சி, ஈரோடு ஆகிய மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 500 கன அடி நீர் திறக்கப்படுகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 27.15 அடியாக இருந்தது. அணையின் நீர் இருப்பு 6.43 டிஎம்சி.

**வேளாண் அறிவியல் மையத்தில்இலவச வேளாண் பயிற்சிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு**

தோகைமலை, : வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் டாக்டர் திரவியம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

இப்பயிற்சி பெற வேளாண் மற்றும் அதனை சார்ந்த துறைகளில் இள நிலை அல்லது முதுநிலை பட்டம் பெற்றவர்கள் இரண்டு ஆண்டுக்கான பட்டய படிப்பு முடித்தவர்கள், பிளஸ் 2 வகுப்பில் வேளாண்மை பாடத்தினை படித்து முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு 2 மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு முடிவில் வங்கிகளில் கடனுதவி பெற ஆலோசனை வழங்கப்படும். மேலும் தனிநபர் கடனாக குறைந்தபட்சம் ரூ.5 லட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.20 லட்சம் வரையிலும், குழுக்கடனாக ஒரு கோடி வரையிலும் இத்திட்டத்தின் மூலம் கடனுதவி பெறலாம். பொது பிரிவினருக்கு 36 சதவீத மானியமும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்கு 44 சதவீத மானியம் கிடைக்கும். வேளாண் மற்றும் அதனை சார்ந்த துறைகளில் தொழில் துவங்க ஆர்வமுள்ளவர்கள் அரிய வாய்ப்பை பயன்படுத்தி வேளாண் அறிவியல் மையத்தில் பயிற்சி பெற 94868-64308, 94889-67675, 97900-20666 என்ற செல்போனில் தொடர்பு கொண்டு 10 நாட்களுக்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

**புதுக்கோட்டையில் வேளாண்மை கல்லூரி அமைக்க வேண்டும் இந்திய கம்யூனிஸ்ட் தீர்மானம்**

புதுக்கோட்டை,: புதுக் கோட்டை மாவட்டத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

புதுக்கோட்டையில் எம்எல்ஏ முத்துக்குமரன் முதலாமாண்டு நினைவு நாளையொட்டி இந்திய கம்யூனிஸ் கட்சி சார்பில் மக்கள் கோரிக்கை மாநாடு மாவட்ட செயலாளர் செங்கோடன் தலைமையில் நடைபெற்றது. கட்சி மாநில செயலாளர் தா.பாண்டியன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில், இந்தியாவின் முதல்பெண் மருத்துவர் முத்துலெட்சுமிரெட்டி பிறந்த இம்மண்ணில் அரசு மருத்துவக்கல்லூரி அமைக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம் காலம் காலமாக வறண்ட பகுதியாக இருப்பதால் குடிநீர் தட்டுப்பாடு மற்றும் விவசாயம் செய்யமுடியாத நிலை உள்ளது. எனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்டகால கோரிக்கையான காவிரி- குண்டாறு இணைப்புத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும்.

புதுக்கோட்டையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் குடுமியான்மலை அண்ணாப்பண்ணை, வம்பன் பயறுவகை ஆராய்ச்சி பண்ணை, வல்லத்திராக்கோட்டை அரசு தோட்டக்கலை பண்ணை, வெள்ளாளவிடுதி அரசு எண்ணைவித்து பண்ணை உள்ளட்ட வேளாண் பண்ணைகள் இருப்பதால் இம்மாவட்டத்தில் அரசு வேளாண்மை கல்லூரி அமைத்திட வேண்டும்.

அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்போருக்கு பட்டா வழங்க வேண்டும். வீட்டுமனைப் பட்டா மற்றும் குடிசை வீட்டில் வசிப்போருக்கு ரூ.3 லட்சத்தில் கான்கீரிட் வீடு கட்டித்தர வேண்டும். புதுக்கோட்டை மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் பட்டுக்கோட்டையில் இருந்து ஆலங்குடி, புதுக்கோட்டை வழியாக மணப்பாறைக்கு புதிய ரயில் பாதை போக்குவரத்தை மத்திய ரயில்வே அமைச்சம் ஏற்படுத்திட வேண்டும். தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை மத்திய அரசு தடுத்து நிறுத்திட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்ட கல்லணை கால்வாய் பாசன பகுதிக்கு டெல்டா பாசன பகுதிக்கு கிடைக்கும் அனைத்து சலுகைகளும் கிடைத்திட அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும். புதுக்கோட்டை டாக்டர் முத்துலட்சுமிரெட்டி தலைமை மருத்துவமனையை மேம்படுத்த வேண்டும். புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் இம்மாநட்டில் நிறைவேற்றப்பட்டது.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணை செயலாளர் மகேந்திரன், சட்டமன்ற குழுத் தலைவர் எம்.எல்.ஏ. கோவை ஆறுமுகம், சிவகங்கை எம்.எல்.ஏ. குணசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பெரியகுளம் அருகே மா, தென்னந்தோப்புகளில் வனவிலங்குகள் அட்டகாசம் விவசாயிகள் வேதனை

பெரியகுளம், : பெரியகுளம் அருகே நிலத்திற்குள் வன விலங்குகள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

பெரியகுளம் அருகே சோத்துப்பாறை மலைப்பகுதி மற்றும் அடிவாரப் பகுதிகளில் பல ஏக்கர்

பரப்பளவில் மா, தென்னை, வாழை, நெல்லி, சப்போட்டா விவசாயம் செய்து வருகின்றனர். இத்தோப்புகளை ஒட்டி மலை பகுதியில் இருந்துவரும் காட்டு மாடுகள், பன்றிகள், குரங்குகள் நிலத்திற்குள் புகுந்து பயிர்களையும், தென்னை, மா மரங்களை சேதப்படுத்தி வருகின்றன. இதனால் பல லட்சம் மதிப்பிலான விவசாயப் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு கூல்மடம் என்ற பகுதியில் தென்னை விவசாயிகள் சங்க துணைத்தலைவர் வெற்றி என்பவருடைய தோட்டத்தில் வன விலங்குகள் புகுந்தது. அங்கு நடப் பட்டிருந்த 50க்கும் மேற்பட்ட தென்னை

கன்றுகளை பறிந்து எறிந்தன. இதனால் சுமார் ரூ.2 லட்சம் மதிப்பில் சேதம் அடைந்துள்ளது. மேலும் பல்வேறு பகுதிகளில் உள்ள விளை நிலங்களையும் சேதப்படுத்தியுள்ளன.

இதுகுறித்து விவசாயி வெற்றி கூறுகையில், ‘ வனத்துறைக்கு சொந்தமான இடத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் விளைநிலங்கள் உள்ளன. இங்கு வன விலங்குகள் அவ்வப்போது புகுந்து விவசாய பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. இதனால் விவசாயிகள் தொடர்ந்து பாதிப்படைந்து வருகின்றனர். வன விலங்குகள் விளை நிலங்களுக்குள் வராமல் தடுக்கும் வகையில் அகழி அமைத்து, மின்வேலி ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விளைநிலங்களுக்குள் புகுந்து சேதப்படுத்தும் வன விலங்குகளை தடுக்க முன்வர வேண்டும். மேலும் சேதமடைந்த பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக மாவட்ட கலெக்டருக்கும், வனத் துறையினருக்கும் மனு அனுப்பியுள்ளோம்’ என் றார்.

**பல்லுயிர் பெருக்க விழிப்புணர்வு முகாம்**

சின்னமனூர், : சின்னமனூர் கேகேகுளம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மத்திய அரசின் சுற்றுசூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், திண்டுக்கல் அமைதி அறக்கட்டளை, சின்னமனூர் நியூஸ் தொண்டு நிறுவனம் சேர்ந்து பல்லுயிர் பெருக்கம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதற்கு ஆசிரியர் ஹேமமாலினி தலைமை வகித்தார். எரசை டோல்டு டிரஸ்ட் இயக்குனர் பிச்சைமணி வரவேற்றார். பல்லுயிர் பெருக்கத்திற்கான வழிமுறைகள் திடகழிவு மேலாண்மை, சுகாதாரம், பாலிதீன்பை ஒழித்தல், மரங்களின் அவசி யம், சிறுதானிய விவசாய முறைகள் குறித்து கன்னிசேர்வை பட்டி தபால் அதிகாரி மனோகரன் விளக்கமளித்தார். இதற் கான ஏற்பாடுகளைநியூஸ் தொண்டு நிறுவன செயலா ளர் நாகேந்திரன் செய்திருந்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜீவா நன்றி கூறினார்.

**சவடு மண் அள்ளுவதால் விவசாய நிலங்களில் பாதிப்பு**

திருச்சுழி, : திருச்சுழி பகுதியில் ஆற்றுப்படுகை மற்றும் விளைநிலங்களில் அனுமதித்த அளவைமீறி சவடு மண் அள்ளப்படுவதாக புகார் எழுந்துள்ளது.இதனால் விவசாய பணிகள் பாதிக்கப்படுகிறது.

திருச்சுழி பகுதியில் கிருஷ்ணாபுரம், பனையூர், முத்துராமலிங்கபுரம், இலுப்பையூர் உள்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் குண்டாற்று படுகையை ஒட்டி ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. இதில் நெல், கடலை, மக்காச்சோளம் போன்ற எண்ணெய்வித்து பயிர்களை பயிரிட்டு விவசாயிகள் பயனடைந்து வந்தனர்.

தற்போது அரசிடம் அனுமதி பெற்று சவடு மண் அள்ளுதல் என்ற பெயரில் விவசாய நிலங்களை சிலர் பாழ்படுத்தி வருகின்றனர். அனுமதித்த அளவை மீறி மண் அள்ளுகின்றனர். இது குறித்து மாவட்ட நிர்வாகத்திடம் விவசாய சங்கம் சார்பில் பலமுறை புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

கிராம மக்கள் ஏராளமானோர் ஊரை காலி செய்துவிட்டு கோவை, மதுரை, சென்னை போன்ற நகரங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். எனவே, சவடு மண் அள்ளுவதை முறைப்படுத்தி, விவசாய நிலங்களை பாதுகாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோரிக்கை வலுத்துள்ளது.

**வெப்பத்தை தாங்கும் வகையில் கோழிகளை பழக்க வேண்டும்; வானிலை மையம் தகவல்**

நாமக்கல், : நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வரும் 3 நாட்களுக்கான வானிலை ஆலோசனை வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

நாமக்கல் மற்றும் அதன்சுற்றுப்புற பகுதியில் வரும் 3 நாட்களும் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில் தெற்கில் இருந்து வீசும். வெப்பநிலை அதிகபட்சமாக 102டிகிரியும், குறைந்தபட்சமாக 78 டிகிரியும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிக அளவு 80 சதவீதமும், குறைந்த அளவு 26 சதவீதமாகவும் காணப்படும். பகல் வெப்பம் 100 டிகிரியை கடந்து நிலவினாலும், அதிக நேரம் நிலவும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது. ஆதலால் வெப்ப அயற்சியின் அளவும் உயராமல் காணப்படும். ஏப்ரல் மாதத்தின் 2வது வாரத்தில் இருந்து உச்சகட்ட வெப்ப அளவுகள் நீண்ட நேரம் நிலவும். அதற்கு முன்னரே கோழிகளில், இவ்வெப்பத்தை தாங்கி உற்பத்தியை தக்கவைத்து கொள்ளும் வகையில், தீவனத்திலும், தண்ணீரிலும் வைட்டமின் சி மற்றும் எலக்ட்ரோ லைட்ஸ் தாது உப்புகள் கலந்து தீவனத்தில் பகலில் தவிர்த்து, மாலை இரவு வேளைகளில் கொடுத்து பழக்க வேண்டும். அதிக

வெப்பநிலை காரணமாக நன்கு வளர்ந்த தென்னை மரங்களில் கருந்தலைப்புழுக்களின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த புரோக்கோனிட் ஒட்டுண்ணியை மரம் ஒன்றிற்கு 30 என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து 5 முறை இடவேண்டும். இந்த ஒட்டுண்ணி தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் கிடைக்கும்.இவ்வாறு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**காரைக்கால் விவசாயிகளுக்கு நிவாரணத்துடன் பயிர் காப்பீட்டு தொகை வழங்காதது ஏமாற்றம்**

காரைக்கால், : காரைக்கால் விவசாயிகளுக்கு நிவாரணத்துடன், பயிர் காப்பீட்டுத்தொகையை வழங்காதது ஏமாற்றம் அளிக்கிறது என்று மார்க்சிய கம்யூனிஸ்டு கூறியுள்ளது.
இது குறித்து, மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் வின்செண்ட் கூறியதாவது:

காரைக்கால் மாவட்டத்திற்கான காவிரி நீர், மழை இல்லாத காரணத்தால் குறுவை, சம்பா மற்றும் தாளடி சாகுபடிகள் பொய்த்துபோனது. இந் நிலையில் ஒரு சில நாட்கள் பெய்த மழையில் நேரடி நெல் விதைத்த விவசாயிகள் தொடர்ந்து மழை பெய்யாத காரணத்தால், அரசின் அறிவிப்பை நம்பி பம்பு செட் மூலம் பயிர்களை காப்பாற்றினார்கள். ஆனால், அரசு அறிவித்த படி இதுநாள் வரை பம்புசெட்டுக்கான டீசல் மானியம் வழங்கப்படவில்லை.
இந்நிலையில், புதுச்சேரி அரசு காரைக்காலில் 4,749 ஹெக்டேர் பயிர்கள் பாதிக்கப்பட்டதாக உத்தேச கணக்கெடுத்து, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படுமென அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு மகிழ்ச்சி அளித்தாலும், தமிழகத்தை போல் நிவாரணத்துடன், பயிர் காப்பீட்டுத்தொகையை வழங்காதது ஏமாற்றத்தை அளிக்கிறது. எனவே, தமிழகத்தைபோல், பயிர் காப்பீட்டுத்தொகையுடன் நிவாரணத்தையும் வழங்க புதுச்சேரி அரசு முன்வரவேண்டும். மேலும், காரைக்கால் மாவட்ட வேளாண் அதி காரிகளின் உத்தேச கணக்கெடுப்பின்படி நிவாரணம் வழங்காமல், உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளை கண்டறிந்து நிவாரணம் வழங்கவேண்டும். அதையும், ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வழங்கவேண்டும். விவசாய தொழிலாளர்கலுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கவேண்டும். விவசாயிகளின் கூட்டு றவு கடன்களை ரத்து செய்யவேண்டும். கால் நடைகளுக்கு உரிய தீவனம் வழங்கவேண்டும். எதிர்காலத்தில் காரைக்காலில் தண்ணீரை சேமித்து வைக்க ஏரி, குளம் போன்றவற்றை தொலை நோக்கு பார்வையோடு வெட்ட முன்வரவேண்டும் என்றார்.